NANCHIL MALAR

மலர் : 10 இதழ் : 7 நாஞ்சில் மலர் மே 2020

VOLUME : 10 ISSUE:7 NANCHIL MALAR MAY 2020

விலை : ₹20/-வருடச் சந்தா: ₹.200/- Annual Subscription ₹ 200/-

# நாஞ்சில் மலர்



இந்திய சுதந்திரப் போராட்ட வீரரும், குமரி மாவட்டம் தமிழகத்துடன் இணைக்கப் போராடிய வீரரும், நாகர்கோவில் நகர்மன்ற முன்னாள்உறுப்பினருமான தியாகி கோ.நாகலிங்கம் அவர்களின் 100 ஆவது பிறந்ததினம் 11- 05 - 2020.

KNOWLEDGE EMPOWERS

Rajalakshmi™
Institutions

RAJALAKSHMI ENGINEERING COLLEGE
An AUTONOMOUS Institution
Affiliated to ANNA UNIVERSITY, Chennai

RAJALAKSHMI INSTITUTE OF TECHNOLOGY

RAJALAKSHMI SCHOOL OF BUSINESS

Rajalakshmi School of Architecture

RAJALAKSHMI COLLEGE OF NURSING

RAJALAKSHMI VIDYASHRAM MATRIC. HR. SEC. SCHOOL

**Administrative Office:**
69, New Avadi Road, Kilpauk, Chennai - 600 010
Phone: +91-44-26442472, 26461316, 26460124
Fax: +91-44-26445151
email: admin@rajalakshmi.edu.in

www.rajalakshmi.org

25 years OF ACADEMIC EXCELLENCE

# நாஞ்சில் மலர்

மலர் : 10 இதழ் : 7 மே 2020

VOLUME : 10 ISSUE : 7 NANCHIL MALAR MAY 2020

*******************************************************

பதிப்பாசிரியர்: : கி. தானப்பன்

ஆசிரியர் : கி. கண்ணன் துணையாசிரியர்: மு. கோபி

இதழ் வடிவமைப்பு மற்றும் அச்சிடுபவர் : ப. இளங்கோ

---

ஆசிரியர் குழு: பெ .சாஸ்தாங்குட்டி பிள்ளை, என்.பொன்னுசுவாமி , 'நாஞ்சில் கொண்டான்' எஸ். சரவணன், முனைவர். சி. உதயகுமார், P. வேலப்பன், நா.சேகர்

---

ஒருங்கிணைப்பாளர்கள்: ம. மகராஜபிள்ளை, தியாகி. தெ. வே. பகவதிப் பெருமாள் , சுந்தர் சுப்பிரமணியம், எஸ். கிருஷ்ண பிள்ளை

---

ஆலோசகர்கள் : பி . யோகீசுவரன், மோகன் காந்திராமன்

நிர்வாக இயக்குனர் : A. பூதலிங்கம் பிள்ளை,

*******************************************************

நாஞ்சில் மலருக்கு சந்தா அனுப்ப விரும்புபவர்கள் காசோலை அல்லது வரைவோலையில் 'Nanchil Malar' எனக் குறிப்பிட்டு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்! வருட சந்தா ரூ.200/-

முகவரி: கி.தானப்பன், பிளாட் எண்: 25, கதவு எண்:10, 2-வது தெரு, அருள் நகர், மாதவரம் பால்பண்ணை, சென்னை.600 051,

Ph: 044 25552073, 9840259614 , kt.appan@yahoo.co.in

---

நாஞ்சில் மலருக்கு சந்தா, நன்கொடை, NEFT மூலம் அனுப்ப விரும்புபவர்கள் , NANCHIL MALAR, Current A/C No. 332901010035895, ( IFSC: UBIN0533297) UNION BANK OF INDIA, MADHAVARAM, CHENNAI 600110 .என்ற முகவரிக்கு அனுப்பி விட்டுத் தங்கள் முகவரியைத் தெரிவிக்கவும்.

---

நாஞ்சில் மலரில் வாசக அன்பர்களால் எழுதப் பெற்று வெளிவரும் கட்டுரைகள், கருத்துக்கள், தகவல்கள் அனைத்தும் அவர்களது சொந்தக் கருத்துக்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். - ஆசிரியர்

# தியாகி கோ.நாகலிங்கம்

## அவர்களின் 100 ஆவது பிறந்த தினம் 11-05-2020.

திரு நாகலிங்கம் நாகர்கோவில் நகரின் மையப்பகுதி திலகர் தெருவில் திரு. எஸ். கோலப்ப பிள்ளை, திருமதி. பார்வதியம்மாள் தம்பதியினரின் இரண்டாவது மகனாகப் **11.5.1920**இல் பிறந்தார். நாகர்கோவில் ஸ்காட் கிருஸ்துவ உயர்நிலை பள்ளியில் **11**ஆம் வகுப்பு வரை படித்து முடித்தார். பள்ளிப்படிப்பின் போதே தேசிய உணர்வால் உந்தப்பட்டு வேலை நிறுத்தங்கள், போராட்டங்களில் ஈடுபட்டு, ஊர் காரியங்களிலும், பொதுத் தொண்டுகளிலும் ஈடுபட்டு வந்தார். அப்போது அவரிடம் இயற்கையாக அடங்கி இருந்த தேசிய உணர்ச்சி **1942** இல் வெளிவரத் தொடங்கியது.

திரு. நாகலிங்கத்தின் தேசிய முன்னோடிகள்; டாக்டர் எம்.ஈ.நாயுடு, பொ.திரிகூடசுந்தரம் பிள்ளை, சிவமுத்துகருப்ப பிள்ளை, ஏ.சங்கர பிள்ளை, நாராயண பெருமாள் நாடார் ஆகியோராவார்கள். வைசிராஸ் சுப்பிரமணியம் என்பவர் சிறுவர்களுக்கு இராட்டையில் நூற்க கற்பித்தும், தேசிய பாடல்களை சொல்லி கொடுத்தும் சுதந்திர கனலை மூட்டினார். திரு. நாகலிங்கம் அந்தக் கூட்டத்தில் ஒருவராய் சேர்ந்தார்.

வெள்ளைக்கார அரசுக்கு வெஞ்சாமரை வீசிய திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் நாகர்கோவில், மேலரதவீதியில் **1938** ல் இந்தியாவின் மாபெரும் தேசியத் தலைவர் திலகர் பெருமானின் திருப்பெயரால் திலகர் வாலிபர் சங்கம் நூல் நிலையம் மற்றும் வாசிப்பு சாலையை அமைத்தார். பொதுமக்களின் ஒத்துழைப்புடன் சங்கத்திற்கு சொந்த க் கட்டிடம் கோவில் இடத்தில், கோவில் முன்பாக அமைத்தார். நூல் நிலையத்தில் **1942** ல் ஜீவா, சி.பி.இளங்கோ, ஜி.எஸ்.மணி போன்றோரைப் பேச வைத்தவர் நாகலிங்கம் அவர்களே. அன்றிலிருந்து ஜீவாவின் இறுதி நாள் வரை அவர்களின் நட்பு தொடர்ந்து வந்தது. நாகலிங்கத் தின் கொள்கையில் முற்போக்கு வாசனை வீசியது என்றால் அது ஜீவா ஏற்றிய தீபமாகும்.

---

- **1942** ஆகஸ்ட் **9** அன்று வெள்ளையனே வெளியேறு போராட்டத்தை மகாத்மா காந்தி முன் வைத்தார். வக்கீல் எஸ். சுப்பிரமணிய பிள்ளை, சிவ முத்துகருப்ப பிள்ளை, கோட்டாறு பத்மசிங்

*நாகலிங்கம் ஆகியோர் அரசுக்கு எதிராக தடையை மீறினார்கள். காவல்துறையின் ஆதிக்கம் அன்று அத்து மீறியது. அன்று இரவு இரண்டு மணிக்கு போலீஸ் சூப்பிரண்டென்ட் சுப்பிரமணிய பிள்ளை தலைமையில் போலீசார் நாகலிங்கத்தை கைது செய்து கோட்டாறு காவல் நிலைய லாக்கப்பில் அடைக்கப்பட்டு, பின்னர் குழித்துறை காவல் நிலைய லாக்கபிற்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு இரண்டாண்டு கடுங்காவல் தண்டனையும், ஐநூறு ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. பின்னர் திருவனந்தபுரம் மத்திய சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அன்று அவரோடு சிறையில் உடன் இருந்தவர்கள் சிவ முத்துகருப்ப பிள்ளை, எஸ்.சிவன் பிள்ளை, பத்மசிங் மற்றும் கேரளத்தில் பிற்காலத்தில் அமைச்சர்களாக இருந்த சி.கேசவன், பட்டம் தாணு பிள்ளை, ஜான் பிலிப்போஸ் மேலும் பலர்.*

***1943** மார்ச்சில் நாகர்கோவில் பாலமோர் ரோட்டில் கிருஷ்ணா ரெடிமேட் ஸ்டோர்ஸ் என்ற கடையொன்றை தொடங்கி நடத்தி வந்தார். **1946** ல் சுசீந்திரம் தேரில் கொடி கட்டியதாக வழக்கு தொடுக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் அவ்வழக்கில் நாகலிங்கத்தை அலைக்கழித்த அரசு பின் வழக்கை வாபஸ் பெற்றது.*

***1945** டிசம்பர் **16** ஆம் நாள் "அகில திருவாங்கூர் தமிழர் காங்கிரஸ்" உருவானது. அந்த கூட்டத்தை கூட்டுவித்த இரு கன்வீனர்களில் நாகலிங்கமும், இன்னொருவர் இரா. வேலாயுதப் பெருமாளும் ஆவர். இதுவே **1946**ல் "திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதில் நாகலிங்கம் செயலாளராக இருந்து வந்தார். இந்த நேரத்தில் நாகலிங்கம், பி.எஸ்.மணி, ஆர்.கே.ராம் ஆகியோர் தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடுகளுக்கு சொந்த செலவில் சென்று, அங்கு சந்தித்த தலைவர்களிடம் திருவிதாங்கூர் தமிழ்ப்பகுதிகளை தமிழ்நாடு காங்கிரசின் கீழ் கொண்டு வர வேண்டுமென வேண்டுகோள் விடுத்தனர்.*

- ***1946** ல் நாகலிங்கத்திற்கு திருமணம் நடைபெற்றது. கன்னியாகுமரியைச் சேர்ந்த பகவதியம்மாள் அவருக்கு திருமதி ஆனார். அத்திருமணம் அவரது விருப்பத்திற்கு ஏற்ப சீர்திருத்த திருமணமாக மாபெரும் தியாகி சிவ முத்துக்கருப்ப பிள்ளை தலைமையில் மாலை*

மாற்றலோடு நடைபெற்றது. கதர் அவரது நிரந்தர ஆடை. வெள்ளை கதர் வேட்டி, கதர் ஜிப்பாவைத்தான் அணிந்து வந்தார். ஒரு துணிச்சல் மிக்க வீரராகச் செயல்பட்ட இவரிடம் கம்பால் ஒரு போலீஸ் அதிகாரி அடிபட்ட நிலை நேர்ந்ததுண்டு. **1948** ல் ஒரு போலீஸ் வேனியிலிருந்து ரிசர்வ் போலீசார் பாலமோர் ரோட்டில் தன் கடையில் அமர்ந்திருந்த நாகலிங்கத்தை கடையினின்று பலவந்தமாக இழுத்து சாலையில் போட்டு பட்டப்பகலில் பலர் பார்க்க அடித்தனர், உதைத்தனர். போலீஸ் வேனின் உள்ளே தூக்கிப்போட முயன்றனர். இச்சமயத்தில் அங்கு நின்ற கூட்டமும், பக்கத்துக் கடை பிரமுகர்களும் எதிர்த்து கூச்சல் போட்டனர். கலவரம் வரும் என்ற நிலை எட்டியதும் போலீசார் அவசரமாக வேனில் ஏறிச் சென்று விட்டனர். மறுநாள் திருவிதாங்கூர் தமிழ்ப் பகுதியில் ஹர்த்தால் நடைப்பெற்றது. போலீசார் நாகலிங்கம் மீது வழக்கு பதிவு செய்து தேடினர். நாகலிங்கம் தமிழ்நாட்டிற்குச்சென்று தலைமறைவு ஆனார். பின்னர் கோர்ட்டில் ஆஜராகி வழக்கு நடத்தி வெற்றி பெற்றார்.

**1953, 1959** ஆகிய ஆண்டுகளில் நாகர்கோவில் நகர்மன்ற தேர்தலில் பத்தாம் வார்டில் சுயேட்சை வேட்பாளராக சிங்கம் சின்னத்தில் நின்று வெற்றி பெற்ற நாகலிங்கம் செய்த பணிகள் இவை :

1. இன்று நாகராஜா திடலாக இருந்த இடம் முன்பு கொசு அரிக்கும் குளமாக இருந்தது. அதை மாற்ற பெரும் முயற்சி செய்து வெற்றி கண்டது.
2. பத்தாம் வார்டில் வீதிகளில் , முடுக்குகளில் தார் மற்றும் சிமெண்ட் சாலைகளை இட நகர்மன்றத்தில் வேண்டி வெற்றி கண்டது .
3. பெண்களுக்குரிய கழிப்பிடங்கள் பத்தாம் வார்டில் கட்டிக் கொடுத்தது.
4. இன்றைய விளையாட்டரங்கை உருவாக்க நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற உதவியது.
5. நாகர்கோவில் நகர்மன்றத்தில் நாகராஜா திடலை 99 வருடங்கள் தனி நபருக்கு குத்தகை விட தீர்மானம் வந்தபோது அதனை உறுப்பினர் நாகலிங்கம் சுயநலம் கருதாமல் பொது நலனுக்காக மேற்படி தீர்மானத்தை எதிர்த்து பேசி தீர்மானத்தை நிறைவேற்ற முடியாமல் செய்து இன்று சுமார் ரூபாய் ஐம்பது கோடி மதிப்புள்ள நாகராஜா திடலை தனி நபரின் கைக்கு மாறாமல் அரசாங்க சொத்தாக இருக்கும்படி செய்த

பெருமை நாகலிங்கம் அவர்களுக்கே சேரும்.

இந்த பொதுத் தொண்டுகளை செய்து வரும் போது **1954** ல் மீண்டும் நாகலிங்கத்தை திருவிதாங்கூர் போலீஸ் தக்கலை சதி வழக்குக்காகத் தேடியது. போலீசாரின் கைகளில் சிக்காது பல மாதங்கள் நெல்லை மாவட்டத்தில் அலையும் நிலையினுள் அகப்பட்டு கஷ்ட நஷ்டங்கள் அனுபவித்தார். இவரது வியாபார நிறுவனம் படுத்துவிட்டது. பணம் நஷ்டம் அவரைப் பல இன்னல்களுக்குள்ளாகியது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் **1973** ல் அரிசி தட்டுப்பாடு அதிகமாகியது. தடையை மீறி நெல்லை மாவட்டத்திலிருந்து அரிசியை மூட்டை கட்டி எடுத்து வந்த தொண்டர்களை கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களில் ஒருவராக நாகலிங்கம் கைது செய்யப்பட்டார்.

**1978** ல் மனைவியை இழந்து வாழ்வில் அடியும், சிறையும் இவரை தளர்வடையச் செய்துவிட்டன. இவருக்கு சேகர், ராஜூ என்ற மகன்களும், கஸ்தூரி, சாந்தி என்ற மகள் களும் உள்ளனர்.

**1972** சுதந்திர தின விழாவில் மத்திய அரசின் தாமிரப்பட்டயமும், மாநில அரசின் வெள்ளி பதக்கமும் பெற்றார். **1981** ல் முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர் அவர்களின் திருக்கரங்களால் கேடயம் பெற்றார்.

**1997** ல் சென்னையில் நடைபெற்ற சுதந்திரதின பொன் விழாவில் முதலமைச்சர் மாண்புமிகு ஜெயலலிதா அவர்களின் திருக்கரங்களால் கேடயம் பெற்றார்.

இந்தியநாட்டு விடுதலை, கன்னியாகுமரியை தமிழகத்துடன் இணைப்பு இயக்கங்களில் ஒரு முக்கிய .பிரமுகரான நாகலிங்கம் அவர்கள் **2002** ஏப்ரல் **26** ஆம் நாள் இயற்கை எய்தினார்.

இந்தியத் திரு நாட்டின் விடுதலைப் போராட்டம் மற்றும் திரு விதாங்கூர் தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு இணைக்க நடைபெற்ற மாபெரும் போராட்டங்களில் தன்னை அர்ப்பணித்துப்பாடு பட்டவர் திரு நாகலிங்கம் அவர்கள். காங்கிரசிலோ மற்றும் எந்த அமைப்புக்களிலே பதவிப் பொறுப்பேற்று எந்த சுகமும் அனுபவிக்காத உண்மைத் தியாகி நாகலிங்கம் அவர்களின் நூறாவது பிறந்த தினமான 11-05-2020 அன்று அவரது நினைவைப் போற்றி இளந்தலைமுறை யினர் அறியச் செய்வதில் பெருமை கொள்கிறோம்.!

# டாக்டர் ஆ. சிவதாணு பிள்ளை,

**பிரமோஸ் ஏவுகணை விஞ்ஞானி அவர்களின்**
**'பயணிக்கத் துணியாத  பாதை - பிரமோசின் வெற்றி மந்திரம்'**



**புத்தகத்தில் இருந்து- சென்ற இதழ்த் தொடர்ச்சி.....**

அரிதாகக் கிடைத்திருக்கும் சில ஆவணங்களில் அவர்கள் பதிவு செய்திருக்கும் சில வேதியியல் சேர்மானங்கள், பல முன்னேற்றங்கள் நிறைந்த இக்காலத்தில் கூட செய்ய முடியாதவையாக விளங்குகின்றன. அவர்கள் பல கொடிய நோய்களைக் கூட குணப்படுத்தினர் என்ற பதிவுகள் காணப்பட்டாலும் அவற்றிற்கான கையேடுகள் கிடைக்கப் பெறவில்லை.

நானே அத்தகைய மருத்துவ அதிசயத்திற்கு சாட்சி. நான் பத்து வயது சிறுவனாக இருந்த போது, என்னுடைய தகப்பனார் திரு. ஆபத்துக்காத்த பிள்ளை ( மற்றவர்களை ஆபத்தில் இருந்து காப்பவர் என்று பொருள்). சித்தம், ஆயுர் வேதம், யோகம் ஆகியவற்றில் ஒரு விற்பன்னர்; அவர் புற்று நோய் போன்ற கொடிய நோய்களைக் குணப்படுத்தியதைக் கண்டிருக்கிறேன். ஆயினும் முன்னோரைப் போன்றே இவரும் எத்தகைய பதிவையும் விட்டுச் செல்லவில்லை.

தொழில் நூட்பங்களில் பல அதிசயங்கள் நிகழ்ந்தன. அவற்றிலும் எத்தகைய முறைகள் கடைப்பிடிக்கப்பட்டன என்பதற்குத் தக்க ஆதாரங்கள் இல்லை. ஐயத்திற்கு இடமின்றி அகன்ற அறிவுப்பரப்புடன் இந்தியா ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளது. ஆனால் கடந்த ஆயிரம் ஆண்டுகளில் நடந்த அந்நிய ஆக்கிரமிப்புக்கள் இந்தியாவை அடிமைத்தனம் என்னும் இருண்ட காலத்திற்குள் ஆழ்த்தி விட்டன. இன்று, அடிமைத்தனம் என்னும் சாபக்கேட்டிலிருந்து விடுபட்டு நெடுந்தூரம் வந்து விட்டோம். பெரும் தலைவர்கள் உள்ளிட்ட பல்லோரின் தியாகங்களால் நாம் விடுதலை பெற்று விட்டோம். ஆனால் எப்படி அவ்விடுதலையைப் பெற்றோம் எனத் தெரிந்து கொள்ளவும், அத்தகைய பெருந்தகையாளர்களுக்கு மரியாதை செலுத்தவும் தலை நகரில் ஒரு போர் நினைவகம் இல்லை. இன்று, வளம் கொழிக்கும் இந்தியாவைக் காண இளைஞர்கள் முழு ஆர்வம் கொண்டுள்ளனர். ஆனால் விடுதலை இயக்கத்தைப் பற்றியும் நம் நாட்டின் அக்காலப் பெருமையையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. அவர்களிடம் நாட்டுப் பற்று என்னும் உணர்வை மேம்படுத்த உதவும் வகையில் பதிவுகளை ஏற்படுத்த வேண்டும்.

மீண்டும் நிகழ்காலத்திற்கு வருவோம். பிரமோஸ் ஒன்றும் சாதாரண சாதனை அல்ல !. எல்லாமே சிறு கீறலில் இருந்து தான் தொடங்கின. கப்பல் எதிர்ப்பு ஏவுகணை ஒன்றை உருவாக்க முற்பட்டுத்தான் பொதுமையான

ஏவுகணை ஒன்றை நாம் உருவாக்கியிருக்கிறோம். இன்று அது ஒரு பல்கள, பல்லிலக்கு, பல்பணி, பல்வழித்திறன் கொண்ட ஏவு கணையாக உருவெடுத்துள்ளது. பத்தாண்டுகளுக்கும் குறைந்த சாதனைக்கால அளவில், முன்னணிச் சக்திகளால் வரைபலகைகளில் இருந்து உருவாக்கத் திற்கான பயணத்தை முடித்திருக்கிறது. நிச்சயமாக பிரமோஸ், அதன் ஆற்றலுக்காகவும் தனித் தன்மைகளுக்காகவும் உலக வரலாற்றில் ஒரு பக்கத்தை உருவாக்கியுள்ளது.

இவ்வாறு கடந்த காலத்தை அசைபோட்டுக் கொண்டு அரபிக்கடலில் கொண்டாட்டத்துடன் செல்லும் கடற்படைப் படை போர்க் கப்பலில், இந்தியா வின் மேற்குக் கரையை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தேன். கப்பல் கரையை அடையப் போகிறது என்று கேப்டன் என்னிடம் தகவல் சொன்னார். கப்பற்படைத் தளத்தை நான் அடைந்தவுடன், பிரமோஸ் அனுபவங்களை ஒரு நூலாகப் படைக்கவேண்டும் என்ன எண்ணம் என் உள்ளத்தைப் பற்றிக் கொண்டது. அது முறையாக எழுதப்படவில்லையெனில். நம்முடைய முயற் சிகளும் தொழில் நுட்பங்களும் எதிர்காலத்தில் மறக்கடிக்கப்பட்டு விடும். நாம் கண்டு பிடித்ததை நம்முடைய இளைஞர்கள் மீண்டும் கண்டு பிடிக்க வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே தான் நான் இன்று தனக் கிணையானதொன்று இன்னும் பிறக்காத நிலையுடைய பிரமோஸ் பற்றிய நூலுடன் இருக்கிறேன்.

நாங்கள் பயணித்த பாதை இதமானது அல்ல ; எங்களுடைய முறைகளில் பல துணிச்சலானவையும் அதற்கு முன்பு முயற்சிக்காதவையும் ஆகும். இந்நூல் நம் எதிர்காலத் தலைவர்களுக்கு மிக்க உதவியாக இருக்கும் என்றும், அவர்கள் தங்களைக் குறிக்கிடும் தடைகளையும் இடையூறுகளையும் மன வலிமையுடன் தாண்டிக் குதிக்கத் தக்க உணர்வூட்டம் பெறுவார்கள் என்றும் நான் நம்புகிறேன்.

இந்நூல் ஒவ்வொருவரையும் சென்றடைய வேண்டும் என்பது என்னுடைய நோக்கமாதலால், இதில் தொழில் நுட்ப நுணுக்கங்களுக்குள் நான் போக வில்லை. இது நம் ஆயுதப் படையின் முன்னணி ஆயுத அமைப்பு ஆகையால் இதன் வடிவமைப்பு மற்றும் செயல்பாடுகள் தொடர்பான முக்கியத் தகவல்களை வெளிப்படுத்தாமல் இருப்பது அவசியமாகிறது.

என்னுடைய அனுபவங்களை விவரிக்க, கடலில் சென்ற பயணத்தை உருவகப்படுத்திக் கூறியுள்ளேன். இதற்குக்காரணம், ஒருவேளை நான் பனி படர்ந்த மங்கிய பாதையில் கப்பலில் பயணித்த போது இந்தச் சிந்தனை வந்ததாக இருக்கலாம்.

ஆகவே நாம் பயணத்தைத் தொடங்கும் போது, சொல்ல விழைவது: ஆவணங்கள் அறிவைப் பாதுகாக்கின்றன; இந்த அறிவே நம் சந்ததிக்கு உதவும். - **டாக்டர் ஆ.சிவதாணுப்பிள்ளை**

## டாக்டர் ஆ. நாகராஜன்

***சி****றப்புடன் பிறந்து வந்த சித்திரையே*
*சிந்தை நொந்தாயோ இன்று பிறந்து வருவதற்கே*
*வந்து மகிழ்வோமே தாரை தாரையாய் ஆலயத்திற்கே உன்னை*
*வரவேற்று மகிழ.*



*தந்து மகிழ்வோமே நீட்டிய கைகட்கு*
*செல்வங்களையும் ஆசிகளையும்*
*கனிகள் பல கண்டு களிப்புறுவோமே*
*உன்வரவை எண்ணி மகிழ்ந்து*
*உருகுகிறோமே உன்னை வரவேற்க நாதியற்றுப்போன நாங்கள்*
*நொந்து போனாயோ உன்னை உளமாற வரவேற்கும் உன் மக்களின் துயர் கண்டு*
*உருகினயோ உள்ள சோர்வுடன்*
*உன்னைக் கண்ணீரோடு*
*கைகூப்பும் உன் பிள்ளைகளின் துயர்கண்டு*
*கொரோனாவல் கட்டுண்டவர்களைக் கண்டவுடன் கொதித்தெழுந்தாயோ கோபத்துடன்*
*கொலை வெறியாட்டம் ஆடி மகிழும் கயவனை கசக்கிட துணிந்தாயோ .*
*துடைத்து விட்டு போய் விடு துல்லியமாக அந்த தொற்றனை*
*உன் தம்பி வைகாசியை யாவது*
*நன்கு வரவேற்க எங்களை வாழ்த்திச் செல் அன்னையே*

## டாக்டர் எஸ்.வரதராஜன்



***ஊ****ரடங்கு சட்டம் ஊரை ஒருவகையில் அடக்கிவிட்டது. ஆனால் என் மனதில் ஓடும் எண்ணங்களை அடக்க முடியவில்லை. தனிமை பழைய நினைவுகளை அசைபோட்டு கொண்டிருப்பதை எந்த சட்டத்தாலும தடுக்க முடியவில்லை. ஒரு வேலையும் செய்யாமல் தனிமையாக இருப்பதுதான் பெரிய தண்டனை என்பதை இந்த ஊரடங்கு சட்டம் நன்றாக உணரச்செய்துவிட்டது. வேலைவெட்டி இல்லாமல் இருப்பவர்களைப் பார்த்து கேலி கிண்டல் செய்திருக்கிறோம். இப்பொழுதுதான் புரிகிறது - அது மிகவும் கடினமானது என்று. ஒரு புதிய அனுபவம் . கற்கால மனிதர்கள் அதிகமாக பேசாமல் இருந்திருக்கலாம் ,*

ஆனால் வேலை செய்யாமல் இருந்ததில்லை. அவர்களைவிட, நாம் மிகவும் மோசமான நிலையை அடைந்துகொண்டிருக்கிறோம். மீண்டும் இயல்பு நிலைக்கு வரும்பொழுது நம் சோம்பரிதனமும் நம்மோடு சேர்ந்து பயணம் செய்யுமோ என்ற எண்ணம் நம்மை பயமுறுத்துகிறது. பல நாட்கள் அலுவலக பக்கமே போகாகதால், அது எங்குள்ளது என்பதே நினைவில்லை. மறந்துபோய் வேறு முகவரிக்கு போய்விடுவோமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. இப்பொழுது ஒரே ஒருவர்தான் நினைவில் இருக்கிறார்கள் - மனைவி. இந்த ஊரடங்கு காலத்தில் அவரை தவிர வேறு யாரையும் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இதுதான் விதி வேறு என்ன சொல்வது. வீட்டின் இரு பக்கமும் அடுக்குமாடி குடியிருப்பு இருந்தாலும் ஒரு பயனுமில்லை. அவர்கள் மூச்சு விடுகிறார்களா என்பதே சந்தேகமாக இருக்கிறது - அவ்வளவு நிசப்தம். இதைவிட சிறையில் இருப்பதே மேல் என்று எண்ணத்தோன்றுகிறது. சக கைதிகளுடன் பேசிக்கொண்டாவது பொழுதை போக்கலாம். அதை விட கொடுமையாக இருக்கிறது. ஒழுங்காக இயற்கையோடு ஒட்டி . மூன்று வேளை உணவருந்திவிட்டு நிம்மதியாக மனநிறைவுடன் இருப்பதை விட்டுவிட்டு, விஞ்ஞான வளர்ச்சி என்ற மாய வலையில் சிக்கி , இயற்கைக்கு எதிராக செயல்பட முனைந்ததின் விளைவுதான் இந்த நிலைக்கு காரணம். இயற்கை விஞ்ஞானத்திற்கு எதிராக போர் தொடுத்து விட்டதோ என்ற பயம் ஏற்பட்டுவிட்டது. யார் இவர்களை செயற்கை கிருமிகளை உருவாக்க வேண்டிக்கொண்டார்கள். இயற்கையோடு ஒட்டி நிம்மதியாக வாழ்வதை விட்டுவிட்டு, அதை கண்டுபிடிக்கிறேன், இதை கண்டுபிடிக்கிறேன் என்று "கொரோனா" என்ற அரக்கனை கண்டுபிடித்திருக்கிறார்கள்

-இது தேவையா. அதை உருவாக்கினார்களே, அதை அளிக்க மருந்தை கண்டுபிடித்திருக்கிறார்களா என்றால் - இதுவரை இல்லை. பெரும்பாலான மனித குலம் அழிந்தபின் கண்டுபிடித்தாலும் அதனால் இறந்தவர்களை மீட்க முடியுமா. இயற்கை சீற்றத்தை எந்த விஞ்ஞானத்தாலும் தடைசெய்ய முடியாது. இறை நம்பிக்கை ஒன்றே இதற்கு ஒரே வழி.



## பிறந்த நாள் வாழ்த்து !

நமது கன்னியாகுமரி வெள்ளாளர் சங்கத்தின் மூத்த உறுப்பினரும் ,

**திரைப்பட இயக்குனருமான திரு. மோகன் காந்தி ராமன்**

அவர்கள் அகவை

88 இல் அடியெடுத்து வைப்பதறிந்து எல்லா வளமும் பெற்று நலமோடு வாழ

**கன்னியாகுமரி வெள்ளாளர் சங்கத்தின் சார்பில் வாழ்த்துகிறோம்!.**

# நாஞ்சில் நாட்டு வேளாளர் எழுச்சியும், வீழ்ச்சியும்

முனைவர் பி.யோகீசுவரன்



மனிதர்கள் முதலில் மலைகளிலும் மலைப்பாங்கான இடங்களிலும் (குறிஞ்சித் திணை) வேட்டவர்களாக வாழ்ந்தனர். அடுத்த நிலையில் காடுகளிலும் காட்டுப்பாங்கான இடங்களிலும் (முல்லைத் திணை) கன்று காலிகளை மேய்த்து ஆயர்களாக வாழ்ந்தனர். பின்னர் ஆறுகள் ஓடுகின்ற பரந்த சம வெளிகளில் (மருதத் திணை) உழவர்களாக வாழ்ந்தனர்.

குறிஞ்சியில் உணவு தேடும் முயற்சியில் விலங்குகளை வேட்டையாடி வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொண்டனர். முல்லையில் ஆடு மாடு ஆகிய கன்று காலிகளை வளர்த்தும் தினை போன்ற காட்டுப் பயிர்களை வளர்க்கத் தொடங்கியும் வாழத் தொடங்கினர். நீரோட்டம் நிறைந்த சம வெளிகளில் (மருதத் திணை) நிலையாகத் தங்கத் தொடங்கி, உணவு தானியங்களை உற்பத்தி செய்யும் தொழிலை மேற்கொண்டனர். அவர்கள் வெள்ளத்தைக் கொண்டு விவசாயம் செய்ததால் அவர்களின் தொழில் வேளாண்மை எனப்பட்டது. அந்த விவசாயிகள் வேளாளர்கள் எனப் பெயர் பெற்றனர். செய்யுந் தொழிலால் வேளாளர்கள் என்று அடையாளப் படுத்தப்பட்டவர்களை சாதிக் கண்ணோட்டத்தில் பிற்காலத்தில் பார்க்கப் பெற்றனர். இவ்வாறு வேறு பட்ட செய்யுந் தொழிலின் அடிப்படையில் வாழ்ந்த மக்களைப் பின்னர் சாதிப் பிரிவினையில் கொண்டு நிறுத்தப்பெற்றனர். காலப்போக்கில் ஏற்ற தாழ்வுகளும் ஏற்பட்டன..

இவ்வாறு சமுதாயக் கட்டமைப்பு தமிழ்நாட்டில் உருவாகி வந்த நிலையில் இந்தியாவின் வட மேற்கில் சிந்து நதி ஓடும் சம வெளியில் தமிழர்களின் மூதாதையர்கள், கிரேக்கர், ரோம், எகிப்து, சுமெரியா போன்ற வெளிநாடு களில் தோன்றிய நாகரிகங்களுக்கு ஒப்பதோர் நாகரிகத்தைத் தோற்றுவித் திருந்தனர். இன்றைக்கு நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுச்சி பெற்றிருந்த அந் நாகரிகம் வீழ்ச்சியுற்றது. அங்கு வாழ்ந்த பூர்வீகத் தமிழினத்தார் தெற்கு நோக்கி வந்து தென்னாட்டுத் தமிழர்களுடன் கலந்தனர். அவர்களில் வேளாண்மை செய்தவர்கள் வேளாளர்கள் ஆனார்கள்.

சோழநாட்டில் காவிரி ஓடும் சம வெளிகளிலும் நெல் கரும்பு போன்ற பயிர்கள் தமிழ் நாட்டைச் செழிப்புறச் செய்தன. மனிதக்கூட்டத்தினர் இடம் பெயர்ந்து செல்லுதல் என்பது தொல் பழங்காலத்தில் இருந்து நடைமுறையான ஒரு இயல்பு. அந்தப் பண்பிற்கு ஏற்பவே, வேணாட்டில் நெல் விளையும் நாஞ்சில்

*நாட்டிற்கு வந்து சேர்ந்தனர்*

*நாஞ்சில் நாட்டில் சங்க கால நாட்களிலேயே (2000 ஆண்டுகளுக்கு முன்பு) நாஞ்சில் பெருநன் என்ற அரசன் ஆட்சி செய்ததைப் புறநாநூறு என்ற சங்க இலக்கியம் ( பாடல் எண்.137, 138, 193, 140, 380) தெளிவுபடக் கூறு கிறது. ஆய் ஆண்டிரன் என்ற அரசன், பாண்டிய அரசரைப் போரில் வென்று தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான் என்பது வரலாறு. சோழர்களும் பாண்டியர்களும் மாறி மாறி நாஞ்சில் நாட்டைக் கைப்பற்றி ஆண்டனர் என்பதும் வரலாறு. இறுதியாக வேளீர் என்ற அரச குலத்தினர் தங்கள் ஆளுகைக்குக் கீழ் கொண்டு வந்தனர். அதனால் வேணாடு என்ற பெயர் அப்பகுதிக்கு ஏற்பட்டது.*

*உழவுத் தொழிலையே தங்கள் வாழ்க்கையாகக் கொண்ட வேளாளர்கள் சோழ பாண்டிய நாட்டில் இருந்து ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்குப் பின் நாஞ்சில் நாட்டில் கூட்டம் கூட்டமாக வந்து குடியேறினர். வேறு வேறு இடங்களில் இருந்து வந்தாலும் தங்கள் தொழிலின் அடிப்படையிலும் மொழியின் அடப்படையிலும் நாஞ்சில் நாட்டு வேளாளர் எனப் பெயர் பெற்றனர்.*

*வேணாட்டு அரசர், அவர்களின் வேளாண்மைத் திறன் அறிந்து விவசாயத் திற்காக நிலங்களைப் பகிர்ந்து அளித்தார். அதுநாள் வரை அங்கு நாஞ்சில் குறவர்கள் என்ற மக்கள், குறைவான இடங்களில் நெல் விவசாயம் செய்து வந்தனர். பெரும்பாலான நிலங்கள் காடடைந்து கிடந்தன. வேளாளர்கள் அந்த நிலங்களை வெட்டித் திருத்தி பயிரேற்றும் நிலைக்குப் பக்குவப்படுத் தினர். வேணாட்டு அரசர்கள் நீர்த்தேக்கத் தடுப்புகளை உருவாக்கிக் கொடுத்தனர். பருவ காலத்தில் பயிருக்கு வேண்டும் வெள்ளம் பாய்ந்து மண்ணில் பொன் விளைந்தது. மாரியின் பெருக்கமும் நெற்குவியலும் குவிந்து வேணாட்டின் நெற்களஞ்சியமாகத் திகழ்ந்த நாஞ்சில் நாடு வேணாடு முழுமைக்கும் சோறு போட்டது.*

*காலப்போக்கில் நிலவரியோடு பண்டாரப் பாட்டம், மணியங்கரம் போன்ற வரிச்சுமைகள் நாஞ்சில் நாட்டார் மீது திணிக்கப் பெற்றன. அவர்கள் திணறத் தொடங்கினர். மழை பெய்யாமல் பயிர்கள் நீரின்றி வாடியும் பயிரின் மேல் பூச்சிகள் விழுந்தும் நெற்கதிர்கள் சாவியாகப் போன காலமும் உண்டு. ஆயினும் அதிகாரிகள் வரி வாங்குவதில் கண்ணாய் இருந்தனர். வரியைக் கட்டிய பின்னர் கையில் காசும் வீட்டில் நெல்லுமின்றி விவசாயிகள் நிலங்களைத் தரிசாகப் போடுவது ஆங்கங்கே நடந்தன.*

வேணாட்டு அரசர் வீர ரவிவர்மா குலசேகரப் பெருமாள் 1600 ஆம் ஆண்டு ஒரு ஆணை பிறப்பித்தார். அதன்படி அரசாங்கத்துடைய நிலங்களையும் கோயில்களுக்கு உரிமையான நிலங்களையும் பயிர் செய்வோர்கள் குளங்கள் சீர்திருத்தவும், உதயகிரியில் கோட்டை கட்டுவதற்குமாக அதிகமான பணத்தை அரசுக்குத்தர வேண்டும் என அந்த ஆணையில் கூறப்பட்டது. கட்டுமானப்பணியில் விவசாயத் தொழிலாளர்களை ஊதியம் இல்லாமல் உழைக்கவும் ஆணையிடப்பட்டது.

அக்காலகட்டங்களில் நாஞ்சில் நாட்டில் ஒவ்வொரு ஊரிலும் கிராம சபைகளிருந்தன. நாஞ்சில் நாட்டின் ஊர்களை உள்ளடக்கிய நாட்டுக் கோட்டம் என்ற பேரவையும் செயல்பட்டது. அங்கு விவசாயிகள் தங்கள் பிரச்சனைகளை எடுத்துப் பேசி வந்தனர். அதன் தலைமை அங்கத்தினர்கள் அரசர்களைச் சந்தித்து தங்கள் கோரிக்கைகளை முன் வைத்து வந்தனர். தங்களுக்கு ஏற்க முடியாத அரசாணைகளை எதிர்த்தும் குரல் கொடுத்தனர். 1600 ஆம் ஆண்டு அரசாணையை ஏற்கமுடியாது என்று நாட்டுக் கோட்டம் கூடி அதே ஆண்டு நவம்பர் மாதம் தீர்மானித்தது. மேலும் விவசாயத் தொழிலாளர்களை ஊதியம் இல்லாமல் கட்டுமானப் பணிகளுக்கு அனுப்ப வேண்டும் என்பதையும் கோட்டம் மறுத்து விட்டது.

இந்த நிகழ்வு போல பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசின் ஆணைகளை தங்களுக்கு ஏற்புடையதாக இல்லாத போது அதற்கு நாஞ்சில் நாட்டார் எதிர் வினை ஆற்றியிருக்கின்றனர். அவ்வாறான கால கட்டங்களில் தங்கள் எதிர்ப்பைக் காட்டு முகத்தான் மலைப் பகுதிகளில் ஏறியிருந்து இறங்கிவர மறுத்திருக்கின்றனர். அரசர் தங்கள் கோரிக்கைகளை ஏற்க வேண்டும் என்ற அறப் போராட்டங்களே அந்த நிகழ்வுகள்.

அவ்வாறான ஒரு போராட்டத்தை 1657 ஆம் ஆண்டு மேற்கொண்ட நாஞ்சில் நாட்டார் எல்லைப் பகுதிக்குச் சென்று திரண்டு நின்றனர். அரசர் உன்னி கேரள வர்மா பூதப்பாண்டிக்கு வந்து அம்மக்களின் இன்னல்களைக் கேட்டறிந்து நீக்கினார். உரிமைக்குப் போராடும் மாண்பு அன்றைய நாட்களில் நாஞ்சில் நாட்டாருக்கு இருந்தது.

அரசாங்கத்தையே அச்சுறுத்தும் வண்ணம் போராட்டங்களை முன்னெடுத்த நாஞ்சில் நாட்டாரைக் கட்டுப்படுத்த வேண்டும் என பிரட்டீஷ் அரசின் பிரதி நிதியாக அதிகாரம் பெற்றிருந்த 'கர்னல் மன்றோ' நாஞ்சில் நாட்டார் சபைகளை ஒழிக்கத் திட்டம் தீட்டினார். அவர் உதயகிரிக்கோட்டைக்கு வந்து தங்கியிருத போது அவரிடமே சென்று தங்கள் கோரிக்கைகளை முன்

*வைக்கும் நோக்கில் நாஞ்சில் நாட்டினர் (பிடாகைக்காரர்) ஊர்வலமாகத் திரண்டு வந்தனர். தங்கள் அடையாள முரசு ஒலிக்க ஊர்வலம் கோட்டையை நெருங்கியது. அந்த அதிகாரி போலீசாரை ஏவி, அவர்களை அடித்து உதைக்கச் செய்தார். முரசுகள் கிழித்தெறியப்பட்டன. அவர்களைக் கைதுசெய்து சிறை வைக்கும் நிகழ்வும் நடந்தது.*

*அதன் பின் கர்னல் மன்றோ **1818** ஆண்டு வேளாளர்களின் சபைகளை நிராகரித்து அரசாணை பிறப்பித்தார். வேளாளர்களின் சமூகப் பொருளாதார வாழ்வின் உயர்வுக்காக செயல்பட்ட சபைகள் செயல்படாமல் போயின.. நாட்டின் தேவைக்கான உணவைத் தங்கள் உழைப்பால் உற்பத்தி செய்து வந்த வேளாளர்கள் அரசின் அடக்கு முறைக்கு ஆளாக்கப் பெற்றனர் என்பது வரலாறு.*

*நெல் விளைச்சல் என்பது பருவம் தோறும் ஒரே சீராக இருப்பதில்லை. வெள்ளப்பற்றாக்குறைகள், பூச்சிகளின் தொல்லையாலும், அவ்வப்போது பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதுண்டு. அரசின் அதிகாரிகள் அதனைப் பொருட்படுத்தாது வரி வசூலிப்பதில் கண்ணாயிருந்தனர். நெற்கதிர்கள் உள்ளீடு இல்லாமல் சாவியாகிவிடும். அதனால் மீண்டும் பயிரேற்ற முடியாமலும் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் இன்னல்களுக்கு விவசாயிகள் ஆளாயினர். நிலத்தைத் தரிசாகப் போடுவதும் ஆங்காங்கே நடந்தன. வரிபாக்கிக்காக விவசாயிகளின் நிலங்களை ஜப்தி செய்வதும் நடைமுறையாயிருந்தது.*

*காவிரிப் படுகை மற்றும் பல்வேறு மாவட்டங்களில் உள்ள பெரும் நிலக்கிழார் களோ, ஜமீந்தார் போன்றோ பெரும் நில உடமையாளர்கள் நாஞ்சில் நாட்டில் இல்லை. சராசரியாக ஓர் ஏக்கரும் அதற்குக் குறைவான நிலமும் உடைய உழுதுண்ணும் வேளாளர்களே பெரும்பாலோர். தங்கள் நிலத்தில் தாங்களே உழைத்து வாழ்வை நடத்தினர். நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து ( பாட்டம் ) பயிர் செய்வோரும் பலராகக் காணப்பட்டனர். வேளாளர்களில் கூலி வேலை செய்வோரும் காலப்போக்கில் பெருகி வந்தனர். இருபதாம் நூற்றாண்டில் கிராமத்தில் உள்ள வேலையில்லாத இளைஞர்கள் சிலர் வடசேரி, கோட்டாறு போன்ற நாகர்கோவில் நகர் புறங்களில் நெசவுத் தொழிலாளர்களாக வேலை பார்த்தனர்.*

*தாய்மொழியில் எழுதப் படிக்கத் தெரிந்து இலக்கிய ஆர்வலர்களாகவும், அரசியல் விழிப்புணர்வு பெற்றவர்களாகவும் ஒரு சிலர் இருந்தனர். ஆயினும் பட்டப் படிப்பு பெற்றவர்கள் கிராமங்களில் மிகக்குறைவானவர்களாகவே*

காணப்பட்டனர். நிலத்தில் தேவையான வருமானம் இல்லாமையாலும் சொந்த நிலமே இல்லாத நிலையாலும் இளைஞர்கள் வேலை தேடி, சென்னை, மதுரை, நெய்வேலி, கோயமுத்தூர் போன்ற நகர்ப்புறங்களுக்குச் சென்று வேலை தேடி வாழ்ந்தனர்.

நாஞ்சில் நாட்டின் ஊர்ப்புறங்களில் குறைவான அளவு சொந்த நிலம் உடையவர்களும் குத்தகை விவசாயிகளுமே பெருவாரியாக இருந்தனர். அவர்கள் கண்டும் காணாமலும் வாழ்க்கைப் போராட்டத்தை நகர்த்தினர். கடன்படாத விவசாயிகள் ஒரு சிலரே. பெருவாரியானவர்கள் நகை அடமானம், அறுவடைக்கு முன்பே மிகக் குறைந்த விலைக்கு நெல்விற்கும் (கோட்டைக்கடன்) ஒப்புதலுடன் முன்பணம் வாங்குதல் போன்ற சிக்கல் களில் மாட்டிக் கொண்டனர்.

இதன் ஊடே 1940 ஆம் ஆண்டிற்கு மேல் அரசாங்கம் 'நெல்லெடுப்பு' என்ற பெயரில் ஒரு கட்டுப்பாட்டைக் (control) கொண்டுவந்தது. அதன்படி நெல்விளைச்சலின் பெரும் பகுதியை மிகக் குறைந்த விலைக்கு, பறிமுதல் செய்வது போல் அரசாங்கம் கவர்ந்து சென்றது. அக்கால கட்டங்களில் விவசாயிகளின் வீடுகளில் நெல்புரை மட்டுமன்று அடுக்களை வரை சென்று சோதனை செய்து, சாப்பாட்டிற்கு வேண்டும் நெல்போக பாக்கி நெல்லை 'பறை' என்ற அளவுக் கருவியில் அளந்து எடுத்துச் சென்றனர். அந்த அளவுக்கருவி மரக்கால் கொண்டு அளப்பதை விட கூடுதல் நெல்லை எடுப்பதாக இருந்தது. 15 கோட்டை நெல் என்றால் அது 16 கோட்டையாக இருக்கும். அதற்காக அரசு கொடுக்கும் பணமோ வெளிச்சந்தை விலைக்கு நான்கில் ஒரு பங்காகத்தான் இருந்தது. அதிகார தோரணையோடு பல பார்வத்தியக்காரர்கள் போலீசின் துணையுடன் வந்து நெல் எடுப்பால் அத்து மீறி ஆதிக்கம் செலுத்தினர். வைக்கோல் படப்புகளைச் சோதனையிட்டும் எவ்வளவு நிலம், பயிர், எவ்வளவு விளைச்சல் என்று கணக்கைக் கேட்டும் விவசாயிகளின் மனதைப் புண்படுத்தினர். புயலின் தாக்கத்தைப் போல விவசாயிகளின் வீட்டைச் சூறையாடினர். கற்பனையாகவோ, கதையாகவோ நான் இதை எழுதவில்லை. எங்கள் வீட்டில் நடந்தவைகளைக் கண்ணால் கண்டவன் நான். ஊரில் பல வீடுகளிலும் பல ஊர்களிலும் இந்த நெல்லெடுப்பு படுத்தியப் பாட்டை பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். கடன் பட்ட வாழ்க்கைக்கு நெல் விவசாயிகளைக் கொண்டு சென்றது அரசின் இந்த அராஜகச் செயல்தான். நாஞ்சில் நாட்டார் தலையெடுக்காமல் தடுத்து நிறுத்தியது இந்த நெல்லெடுப்பு..

திருவிதாங்கூர் அரசின் சபைகளான ஸ்ரீமூலம் சபையிலும், ஸ்ரீசித்ரா சபை

*களிலும் மக்கள் கோரிக்கைகளை எடுத்துச் சொல்வதில் நாஞ்சில் நாட்டார் பெரும் பங்கு வகித்தனர். அரசாணைகள் தமிழில் வர வேண்டும் என்பதற்காகவும், தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் வேண்டும் என்பதற்காகவும் அரசை அச்சபைகளில் வலியுறுத்து வந்திருக்கின்றனர்.*

*மொழிவழியாக மாகாண அமைப்பில் தென் திருவிதாங்கூர் தமிழ்ப் பகுதியை யும் உள்ளடக்க வேண்டும் என மலையாளத்தார் முனைப்புடன் செயல்பட்ட போது அதற்கு எதிர்வினையாகத்' திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ்' என்ற அரசியல் இயக்கத்தைத் தோற்றுவித்து, அதன் வளர்ச்சிக்கும் தொண்டாற்றியவர்கள் நாஞ்சில் நாட்டார். அந்த இயக்கம் எதிர் கொண்ட போராட்டங்களில் முன் வரிசையில் நின்றும், சிறைவாசம் பெற்றும் தியாகஞ் செய்தவர்கள் நாஞ்சில் நாட்டார். அதற்கு முன் சுதந்திரப் போராட்டத்திலும் அவர்கள் பங்கு மகத்தானதாகவே இருந்தது.*

*அவ்வாறான போராட்ட வரலாறைக் கொண்ட நாஞ்சில் நாட்டார் இன்றைய நாட்களில் அடங்கி ஒடுங்கி விட்டனர். அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குக் கூட அரசாங்கம் நாளது வரை செவி சாய்க்கவில்லை. நாற்பது வருடங்களாகப் பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் நாஞ்சில் நாட்டு வேளாளரைச் சேர்த்திட வேண்டும் என்ற கோரிக்கை - கோரிக்கையாகவே கிடப்பில் கிடக்கிறது. போராட வேண்டும் என்ற குணமும் மங்கி வருகிறது.*

*விடுதலைக்குப் பின் கல்வி வேலை வாய்ப்புகளில் மற்ற பல சமுதாயத் தினர் மேம்பட்டு வந்திருக்கின்றனர் என்பது மகிழ்ச்சியான செய்தி. ஆனால் வேளாளர்கள் உயர்கல்விக்கு இடம் கிடைக்காமலும், ஒரு சிலருக்கு இடம் கிடைத்தாலும் அதற்குப் பொருளாதார பின்புலம் இல்லாமலும் தவிக் கின்றனர். பரம்பரையாகச் செய்து வந்த உழவுத் தொழிலைப் புறக்கணித்து வருகின்றனர். ஒரு சிலர் முயன்று படித்து பொறியியல் துறையிலும் பிற படிப்பிலும் முன்னேறியுள்ளனர். பெரும்பாலோர் உடல் உழைப்பு இல்லாத குறைந்த வருமானத்திற்கு வேலை செய்பவர்களாகவே காணப்படுகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் இருந்து மீண்டெழ வேண்டுமானால் கல்வியில் மேலும் மேலும் முன்னேற்றம் பெற வேண்டும். விவசாயம், தொழில் வாணிபம் போன்ற பல் துறைகளில் ஈடுபட்டு உழைக்க முன்வர வேண்டும். அதற்கான ஆர்வத்தைப் பெருக்கிட சமுதாயச் சங்கங்கள் வழிகாட்ட வேண்டும். குறிப்பாக ஒற்றுமை வேண்டும். ஒற்றுமை என்பது யாருக்கும் எதிரானது அல்ல. தமிழ்ச் சமுதாயத்தில் நாமும் பேரங்கமாகத் திகழ வேண்டும் என்ற விழிப்புணர்வு தான் உண்மையான ஒற்றுமை.!*

***நன்றி: நாஞ்சில் நாடு வெள்ளாளர் நலச்சங்கம் - மடிப்பாக்கம்,***
***ஆண்டு விழா மலர் 2020***

*சிறுகதை*

# *மறுபக்கம்*

*திருமதி. பகவதி மோதிலால்*
*9446090272*



*புது மாப்பிள்ளை சுரேஷ் தோரணையாக மனைவி சாந்தியின் கையைப் பிடித்துக்கொண்டு நாகர்கோவில் ரயில்வே ஸ்டே'ஷனில் முதல் பிளாட்பாரத்தில் கம்பீரமாக நடக்க, அவனுக்கு முன்னாடி போர்ட்டர் பெட்டிகளை எடுத்துக்கொண்டு நடந்தார். அம்மாவும், தாய்மாமனும், சொந்தக்காரங்களும், நண்பர்களும் பின்னால் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். சிறிது தூரம் நடந்ததும் சுரேஷ்" தனது வேகத்தை அதிகரித்து போர்ட்டரின் அருகில் வந்து "மூன்றாம் நம்பர் பிளாட் பாரத்தில் இருந்து தானே மும்பை எக்ஸ்பிரஸ் புறப்படும் 'எஸ்-10 இன்ஜினுக்கு பக்கத்திலா, பின்னாடியா" என்று கேட்டதும். தலையில் பெரிய பெட்டியும், அதற்கு மேல் இரண்டு சின்னப் பெட்டியும், இரண்டு தோள்களிலும் பையை தொங்கப் போட்டுக் கொண்டு, கையில் அட்டை பெட்டியை எடுத்துக் கொண்டு வந்த அவர் "தினசரி மும்பை எக்ஸ்பிரஸ் மூன்றாம் நம்பர் பிளாட்பாரத்தில் இருந்துதான் புறப்படும். 'எஸ்-10' பின்னாடிதான் அதுக்கு பக்கத்திலேயே ஏசி கோச்" என்று சொல்லிக்கொண்டே அவரும் நடந்தார். அங்கிருந்து சிறிது தூரம் நடந்து பிளாட்பாரத்தின் இன்னொரு மூலைக்கு வந்ததும், ஒரு பெஞ்சுக்கு அருகில் நின்று கொண்டு "கொஞ்சம் கை தாங்க, பெட்டியை இறக்கி வைக்கிறேன்." என்று சொல்லி, ஸ்டேஷனுக்கு வந்த சுரேஷின் நண்பன் குமாரின் உதவியுடன் பெட்டியை இறக்கிவிட்டு அந்த போர்ட்டர் "சார் 300 ரூபாய் கொடுங்க" என்று கறாராக கேட்டார்.*

*"100 ரூபாயே கூடுதல், நாங்கள் எடுத்திருப்போம், சரி உங்களுக்கும் பொழப்பு நடக்கணும்லாண்ணு எடுக்கச் சொன்னா 300 ரூபா கேட்கிறீர்களே, நாங்களும் இந்த ஊர்க்காரங்கதான், எங்களுக்கும் சும்மா ஒண்ணும் ரூபா கிடைக்காது கஷ்டப்பட்டு தான் பணம் சம்பாதிக்கிறோம்" என்று சொல்லிக்கொண்டே 100 ரூபாயை கொடுக்க, அதை வாங்காமல் அந்த போர்ட்டர் "100 ரூபாய் போட்டு 200 ரூபாவா கொடுங்க சார் நீங்களே பார்த்தீங்க அல்லவா, எட்டுப் பெட்டியை கொண்டு வந்திருக்கேன். நாங்களும் பொழைக்கணும்லா, வேற எங்க போய் கேட்பதற்கு" என்று பதில் சொல்ல. சுரேஷுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது "பேசாம நாமளே எடுத்திருக்கலாம்" என்று சொன்னதையே திருப்பிச் சொல்ல, அருகில் நின்ற சுரேஷின் அம்மா "சரிப்பா, ஒரு நல்ல காரியத்துக்கு போறோம், அப்ப பார்த்துகிட்டு*

*சுணங்கிக்கிட்டு இருந்தா நல்லாவா இருக்கு" என்று சொல்லிக்கொண்டே 200 ரூபாயை எடுத்து அந்த போர்ட்டரின் முன்னே நீட்டி விட்டு "இவரே பெட்டியை எடுத்து சீட்டுக்கு அடியில அடுக்கித் தந்திடுவார்" என்று சொல்ல. அந்தப் போர்ட்டரும் இது நியாயம் என்பது போல் தலையை குலுக்கி கொண்டு ரூபாயை வாங்கி தன் சட்டை பாக்கெட்டில் வைத்து விட்டு "ட்ரெயின் வந்ததும் இதை நான் எடுத்து வைத்துவிடுவேன் அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம். இந்த ஸ்டேஷனில் பதினஞ்சு வருஷமா இருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே அங்கிருந்து நகர்ந்தார்.*

*உடனே சுரேஷ் "இவன் வருவான்னு எனக்கு தோணல, சரி ட்ரெயின் வரட்டும் அப்ப பார்த்துக்கொள்வோம். நம்ம இம்புட்டு பேரு இருக்கோம்ல்ல, சரி, எங்கம்மா, வீட்டு வேலைக்கு வரச்சொன்ன சித்ராவை இன்னும் காணவில்லையே, டிக்கெட் வேற எடுத்தாச்சு, ரூபா வேஸ்ட்டா போய்விடுமோ, அந்த பிள்ளை நம்ம வீட்டுக்கு நேத்தே வந்து இருந்தா இந்த பிரச்சினையே வந்திருக்காது. அதை விட்டுட்டு இன்னைக்கு ஸ்டே'னுக்கு வந்திடுவோம் என்று சொன்னதைக் கேட்டு அட்வான்ஸ் 2000 ரூபாய் கொடுத்தது தப்பா போச்சு" என்று சத்தமாக முணுமுணுத்துக் கொண்டு கொண்டிருப்பதை கேட்ட பவானி அம்மா "நீ சும்மா இருடா 10 மணிக்கு புறப்படற ட்ரெயினுக்கு எட்டு மணிக்கே பிளாட்பார்மில் வந்து விட்டு உயிரை எடுக்காத கண்டிப்பாக வந்து விடுவோம் என்று சொல்லிக்கிட்டு தான் போய் இருக்காங்க நீ உடுத்த துணியை நம்பாதவன்" உனக்கு எதற்கெடுத்தாலும் சந்தேகம் தான், அவங்க வருவாங்க என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஸ்டேஷன் மெயின் கேட் வழியாக உள்ளே நுழைந்த கோமதி, சித்ராவின் கையை பிடித்துக் கொண்டு அங்குமிங்கும் பார்த்துவிட்டு அருகில் நின்ற ஒரு வயதான பெரியவரிடம் ஏதோ கேட்டுவிட்டு இவர்கள் நின்ற இடத்தைப் பார்த்து நடப்பதை கவனித்த பவானியம்மா "எலே மக்கா" அவங்க நம்மைத்தான் தேடுறாங்க அந்த ஆச்சியையும், பிள்ளையையும் இங்க கூட்டிகிட்டு வாலே. நான் அப்பவே சொன்னேன். எனக்கு அவங்களை எத்தனை வரு'ஷமா தெரியும். அந்தக் கால பண்ணையார் குடும்பம். அவங்க போதாத காலம் வீட்டுக்காரர் வேண்டாததை எல்லாம் செய்து எல்லாத்தையும் தொலைச்சிட்டு கடைசில இரத்த வாந்தி எடுத்து அவரும் போய் சேர்ந்திட்டாரு, பாவம் அந்த அக்காளும் குடும்பமும் இப்போது வயத்துப் பாட்டுக்கு நாலு வீட்டுக்கு வேலைக்கு போக கூடிய நிலைமை வந்து விட்டது." என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது அவர்களும் வந்து சேர்ந்தார்கள்.*

*இவர்களைப் பார்த்த கோமதி "அக்கா ஊரில் இருந்து பஸ்ஸில்*

*வரதுக்கு கொஞ்சம் நேரம் ஆயிட்டு காலையிலேயே புறப்படணும்னு நினைத்தாலும் இவ அம்மாவுக்கு பொட்ட புள்ளையை தனியா விடுகிறோமே என்கிற வருத்தம், இதுக்கு தம்பி இவளை கட்டி பிடிச்சுக்கிட்டு ஒரே அழுகை, இதுக்கும் மேல, இவ வேற வெளுத்ததெல்லாம் பாலுங்கிற வெள்ளேந்தியா, எப்படியோ சமாளிச்சு கூட்டிக்கொண்டு வந்தாச்சு, இனி நீங்கதான் இந்த பிள்ளைக்கு காவல் தெய்வம்" என்றாள்.*

*இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் போது "டீ, வடை, சூடான டீ, வடை, சமோசா" என்று கூவிக்கொண்டே இவர்கள் அருகில் வந்த நாகராஜன் "சித்தி என்ன புது மாப்பிள்ளையை வழியனுப்ப வந்தீங்களா, கல்யாணம்னு ஒரு வார்த்தை கூட சொல்லவே இல்லையே, ஊர்ல எல்லோருக்கும் லெட்டர் கொடுத்த நீங்க எங்க குடும்பத்தை மட்டும் மறந்துட்டீங்க. நாங்க பாவம், இப்ப எல்லாம் வெள்ளையும் சொள்ளையுமா இருந்தாதானே மதிப்பு நம்மள மாதிரி பிளாட்பார்ம்ல டீ, விக்கிறவனை மனுஷனா மதிப்பீங்களா.? "*

*உடனே அதிரடியாக பவானியம்மா "சரிடே சரி, விட்டுப்போச்சு, இவன் கல்யாணத்துக்கு ஊருக்கே விருந்து வைச்ச எனக்கு உங்க குடும்பத்திற்கு ஒரு நேரச் சாப்பாடு போட்டா என்ன குறைஞ்சா போகும். விட்டு போச்சு, மன்னித்துவிடு"*

*"என்ன சித்தி, சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னேன், இதைப் போய் பெருசா எடுத்துகிட்டு, மன்னிப்பு, மண்ணாங்கட்டிணு" என்று சொல்லிக்கொண்டே புது மாப்பிள்ளைக்கும், பொண்ணுக்கும், வடையை எடுத்து பேப்பரில் பொதிந்து பவ்யமாக கொடுத்தான். மற்றவர்களுக்கு கொண்டு வந்த ட்ரையை நீட்டினான். எல்லோருக்கும் வடையை கொடுத்துவிட்டு பவானியம்மையை பார்த்து "சித்தி பலகாரம் எல்லாம் வீட்டில் போட்டது கை சுத்தமா இருக்கும்" என்று பந்தாவா சொல்லிக்கொண்டே அனைவருக்கும் டீ-யையும் கொடுத்தான். பிறகு பவானி அம்மாவை பார்த்து "சித்தி புது மாப்பிள்ளைய அனுப்பிட்டுவாங்க" என்று சொல்லிவிட்டு டீ கெட்டிலையும், டிரேயையும் எடுத்துக்கொண்டு போவது போல் புறப்பட்டான். இதைப் பார்த்த பவானியம்மா "எலே, இன்னாலே" என்று 200 ரூபாயை அவனிடம் கொடுக்க "இது எதுக்கு சித்தி, வேண்டாம்", என்று சொல்லிக் கொண்டே கையை நீட்டினான். "வச்சுக்கடே நீ என்ன பெரிய முதலாளியா, ஏதோ கடையில் வேலபாக்க, சாயங்காலம் முதலாளிக்கிட்ட கணக்கு கொடுக்கணும்லா" என்றாள்.*

*இதைப் பார்த்த சுரேஷ் "எனக்கு அப்பவே தெரியும், அவன்*

*எப்படியும் ஒரு 200 ரூபாய்க்கு வியாபாரம் பார்த்துட்டு தான் போவான்னு. எமகாதகன், நைசா வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுகிற மாதிரி அவனுக்கு பத்திரிக்கை வைக்கவில்லை என்று சொல்லிவிட்டு வியாபாரத்தையும் பார்த்துட்டான்."*

*"மக்கா சுரேஷ், எல்லாத்திலையும் குத்தம் பார்க்காத, சொந்தம்ணா கொஞ்சம் கட்டையும் நெட்டையுமா இருக்கும் நம்ம தான் பார்த்தாலும் பார்க்காதது மாதிரி போகணும் இதைத்தான் நம்ம ஊர்ல அணைச்சுக்கிட்டவனுக்கு ஆயிரம் பேர், பகச்சிகிட்டவனுக்கு பத்து பேருன்னு சொல்லுவாங்க" என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது மும்பை எக்ஸ்பிரஸ் மூன்றாவது நடைமேடைக்கு வந்து கொண்டிருப்பதாக அறிவிப்பு கேட்டதும் எல்லோரும் உஷார் ஆனார்கள்.*

*எஸ்-10 பெட்டி இவர்கள் நின்ற இடத்துக்கு அருகில் வந்து நின்றது. சுற்றும் முற்றும் பார்த்த சுரேஷ்,'; "அந்த போர்ட்டர் வரமாட்டான். நாம எல்லோருமாக எடுத்து வைக்க வேண்டியதுதான்" என்று சொல்லி கொண்டிருக்கும் பொழுது எங்கிருந்தோ பாய்ந்து வந்த அந்த போர்ட்டர் எல்லா பெட்டிகளை எடுத்து, லாவகமாக அவர்களின் சீட்டுக்கு அடியில் வைத்துவிட்டு பவானி அம்மையை பார்த்து சிரித்துக்கொண்டே "நமக்கு இது பொழப்பு இதுல கண்ணும் கருத்துமாய் இருப்போம் அப்படி செய்தால் தானே நீங்க அடுத்த முறை எங்களை கூப்பிடுவீங்க உங்கள நம்பித்தான் நாங்க இருக்கோம் நல்லபடியா பையனை வழியனுப்பிவிட்டு பார்த்து இறங்குங்க புறப்படுவதற்கு இன்னும் அஞ்சு நிமிஷம் தான் இருக்கு" என்றபடி அடுத்த பெட்டிக்கு ஓடினான்.*

*வழியனுப்ப வந்திருந்த அனைவரும் எப்படி ட்ரெயினில் கவனமாக பயணம் செய்ய வேண்டும் என்று உபதேச மழையைப் பொழிந்து கொண்டிருக்கையில் ட்ரெயின் சில நொடிகளில் புறப்படும் என்ற அறிவிப்பு கேட்டதும். எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு இறங்க ட்ரெயின் புறப்பட்டது.*

*சுரேஷ்' கொண்டு வந்திருந்த பொருட்களை மீண்டும் ஒருமுறை எண்ணி சரி பார்த்து விட்டு "இவ்வளவு லக்கேஜ் வேண்டாமுன்னு சொன்னா யார் கேட்கிறாங்க, மும்பையில் கிடைக்காத பொருட்களா? அங்க விலை கொஞ்சம் ஜாஸ்தியா இருக்கும் சரி எப்படியோ, ஒரு ரெண்டு மாசத்துக்கு வீட்டு சாமான்கள் வாங்க வேண்டாம், அந்தச் செலவு லாபம்தான்" என்று சொல்லிவிட்டு "சாந்தி உனக்கு சமையல் பண்ண தெரியுமா? எனக்குப் புளிக் கறியும், சுண்டவத்தல் தீயல் குழம்பும், ரொம்ப பிடிக்கும், எங்க அம்மா அவியல் பிரமாதமா செய்வாங்க" என்று சாப்பாடு வி'ஷயத்தில் புகுந்து விளையாடிக் கொண்டிருந்தான்.*

*இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சித்ரா, சுரேஷின் அருகிலிருந்த சாந்தியை பார்த்து மெதுவாக சிரிப்பது போல் சிரித்தாள். இதைப்பார்த்த சாந்தி அவளை அருகில் அழைத்து “உன் பெயர் சித்ராவா? எதுவரை படித்திருக்கிறாய்? உன் தம்பிக்கு உன்மேல் ரொம்ப பிரியமோ? உனக்கு உங்க ஆச்சியை ரொம்ப பிடிக்கும் அப்படித்தானே! ” என பல கேள்விகளைக் கேட்டு அவள் கவனத்தை தன் பக்கம் திருப்ப முயன்றாள்.*

*சித்ராவின் வாடிய முகத்தை பார்த்தவள் “காலையில் ஏதாவது டிபன் சாப்பிட்டாயா?” என்று கேட்டதும் “இல்லை, ஊரைவிட்டுப் போகிறோம் என்கிற நினைப்பே எனக்கு கஷ்டமா இருந்தது, பசியே வரல்ல” என்றாள். சாந்தி உடனே அவளுக்கு மூன்று இட்லியை ஒரு தட்டில் வைத்து கட்டி சட்னியையும், தோசைப்பொடியையும் கொடுத்து சாப்பிட சொன்னாள். முதலில் தயங்கினாலும் பிறகு அதை சாப்பிட்டுக்கொண்டே “ரயில்பெட்டி போவதைப் பார்த்து டாட்டா காண்பித்திருக்கிறேன். இன்னைக்குதான் முதல் முதலா ட்ரெயின்ல ஏறி இருக்கேன். இப்படி ஆடிக் கொண்டிருந்தால் கீழே விழுந்து விட மாட்டோமா, எப்படி மேலே ஏறி படுப்பது? எனக்கு பயமாய் இருக்கிறது, நான் இங்கே கீழேயே படுத்து கொள்கிறேன்” என்றாள்.*

*சுரேஷும், சாந்தியும் என்னமோ பேசி சிரிப்பதை பார்த்து அவளும் என்ன என்று புரியாமலேயே சிரித்தாள். பகல் ஏறத்தாழ இரண்டு மணி ஆனதும் கொண்டு வந்திருந்த சுண்டவத்தல் குழம்பும், பாவக்காய் பொரியலும், தயிரும், ஊறுகாயும் வைத்து திருப்தியாக சாப்பிட்டார்கள். மறு நாள் காலையில் மும்பைக்கு வந்த அவர்கள் தமிழர்கள் அதிகம் வாழும் தாராவி பகுதியிலுள்ள கங்கா பிளாட்டில் 15 ஆவது மாடியில் குடித்தனம் துவங்கினார்கள்.*

*மும்பைக்கு வந்த சில நாட்களிலேயே சித்ராவுக்கு அவர்களை பிடித்து விட்டது. சாந்தி சொல்வதைக் கேட்டு சமையலறையில் உதவி செய்வதும், வீட்டை சுத்தமாக வைத்திருப்பதும், துணிமணிகளை துவைத்து அழகாக மடித்து வைப்பதுமாக பொறுப்பாக நடந்து கொள்வதைப் பார்த்து அவர்கள் இருவருக்கும் வியப்பாக இருந்தது. இதை மனதில் வைத்துக்கொண்டு சாந்தி சுரேஷிடம் “அத்தை பெரிய கில்லாடிதான். ஒத்தைக்கு நின்னு, கல்யாணத்தை நடத்தி நமக்கு இப்போ ஒரு நல்ல பிள்ளையை உதவிக்கு அனுப்பி இருக்காங்க” என்று அடிக்கடி சொல்வாள்.*

*ஒரு வாரத்திற்கு பிறகு அருகில் இருக்கும் பூங்காவுக்கு போகலாம் என்று சொன்னதும் சித்ரா வைத்திருந்த அந்த பழைய பாவாடையையும், பிளவுசையும் போட்டுக்கொண்டு கண்ணாடி முன்பு நின்று முன்னும்*

பின்னும் பார்த்துவிட்டு வந்து "நல்ல இருக்கா அக்கா?" என்றாள். "சரி, எல்லாம் நல்லாதான் இருக்கு, வா, போகலாம்" என்று அவளையும் அழைத்துக்கொண்டு பூங்காவுக்கு வந்து சிறிது நேரம் நடந்து விட்டு அங்கு இருந்த ஒரு பெஞ்சில் இருந்தார்கள். சித்ராவுக்கு அங்கு வந்திருக்கும் பெற்றோர்களையும், குழந்தைகளையும், அவர்களின் நாகரீகமான உடையையயும், குழந்தைகள் விளையாடுவதையும், சிலர் தங்கள் நாய்க்குட்டிகளை கொண்டுவந்து கொஞ்சுவதையும் பார்க்க பார்க்க சித்ராவுக்கு வியப்பாக இருந்தது. அந்த குழந்தைகள் பார்க்கில். "ஊஞ்சலில் ஆடப் போகட்டுமா அக்கா" என்று கேட்டு சிறிது நேரம் ஆடிவிட்டு, "நாளைக்கும் வரலாம் என்னக்கா".

"சரி அதை அப்ப பார்த்துக்கலாம்" என்று சொல்லி வீட்டிற்கு புறப்பட்டார்கள் சித்ராவுக்கு புதிய சூழ்நிலை பிடித்திருந்தாலும், ஆச்சி, அம்மா, தம்பியின் நினைவு வரும்பொழுது வருத்தமாக இருந்தாலும் மனதுக்குள் நல்லவேளை நான் இங்கு வந்ததால் அம்மாவுக்கு கடனை அடைப்பதற்கு கொஞ்சம் பணம் கிடைத்திருக்கிறது. இவங்க எல்லா மாசமும் பணம் அனுப்பி கொடுத்தால் அம்மாவுக்கு ரொம்ப உதவியாக இருக்கும். தம்பியும் படிக்க ஸ்கூலுக்கு போகணும், அம்மாவுக்கு பாரமாக இல்லாமல் நம்மால் இந்த உதவியாவது செய்ய முடிந்ததே, ஏதோ அந்த கடவுள் புண்ணியம் இங்க சாந்தி அக்காவும் அண்ணனும் நம்ம நன்றாக பார்த்துக் கொள்கிறார்கள். நம்மையும் ஒரு மனுஷியா மதித்து இன்னைக்கு ஒரு புதிய ட்ரஸ் போட சொல்லி மொபைலில் போட்டோ எடுத்தாங்களே, அந்த படத்துல நம்ம நல்லா தான் இருக்கோம். தம்பி பார்த்தா ரொம்ப சந்தோஷப் படுவான் என நினைத்து கொண்டு ஹாலில் படுத்திருந்த அவளுக்கு சுரேஷ் அண்ணனின் பேச்சில் சித்ரா என்று சொல்வது போல் கேட்டது.

"நீ சித்ராவுக்கு ரொம்ப இடம் கொடுக்கிறாய். அது ஏதாவது ஒரு பிரச்சினையில் கொண்டு போய்விடும், எல்லாம் ஒரு அளவாக இருந்தால் நல்லது, என்ன இருந்தாலும் அவ அடுத்த வீட்டுப் பிள்ளை, இங்கே வேலை செய்ய வந்திருக்கா, என்பது ஞாபகத்தில் இருக்கணும்"

"எனக்கு எல்லாம் தெரியும், நான் ஒன்னும் உங்கள மாதிரி இல்லை, அடுத்த வாரம் எனக்கும் வேலைக்கு போகணும் நாம ரெண்டு பேரும் ஆபிசுக்கு போய் விட்டால், அவள் மட்டும் தான் வீட்டில் இருப்பாள் எதையாவது எடுத்துட்டு போயிட்டா என்ன செய்வது, நகையையோ, பணத்தையோ காணவில்லை என்று போலீஸ் ஸ்டேஷ'னுக்கு போன அவன் முதலில் இவ போட்டோவைதான் கேட்பான் அதுதான் முன் ஜாக்கிரதையாக மொபைல்ல போட்டோ எடுத்து வச்சுட்டேன் நீங்க உடனே வீட்டுக்கு சி.சி.டி.வி வைத்து

*விடுங்கள். அப்பதான் எனக்கு ஆபீஸிலிருந்து இங்க என்ன நடக்குது, இந்தக்குட்டி எதையாவது பதுக்கி வைக்கிறளாண்ணு கண்டுபிடிக்க முடியும். என்ன முழிக்கிறீங்க அதுக்கெல்லாம் கொஞ்சம் புத்தி வேணும். வீறாப்பா நான் மயிலாடிக்காரண்ணு சொன்னா போறாது எல்லாத்துக்கும் கொஞ்சம் புத்தி வேணும் என்று சொல்லி' சிரிப்பது கேட்டது.*

*இதைக் கேட்டதும் சித்ராவுக்கு ஒரே அழுகையாக வந்தது பட்டணத்தில் உள்ளவர்கள் இப்படித்தான் இருப்பார்களோ? என்னமா நம்மகிட்ட நடிச்சுருக்காங்க, அவங்க உண்மையா அன்பு வைச்சிருக்காங்கன்னு நம்பி ஏமாந்து விட்டோமே. பட்டணத்தில் உள்ளவர்களும் ஒரு காலத்தில் கிராமத்திலிருந்து வந்தவங்கதானே, இங்கு வந்ததும் நெஞ்சில் ஈரமே இல்லாமல் இப்படி நடிக்கிறார்களே, சரி எப்படியும் நம்ம வந்தாச்சு நம்ம நாமாகவே இருப்போம் என்று நினைத்துக்கொண்டே படுக்கையில் புரண்டாள் சித்ரா.*

---



## *இந்திய சுதந்திரப் போராட்டத்தில் காமா அம்மையார்*

*(தொகுப்பு: ஜெய்ஹிந்த் செண்பகராமன் அவர்களின் பேரன் பொ. சேதுசேஷன்) சென்ற இதழ்த் தொடர்ச்சி……*

*அந்த காலகட்டத்தில் நாற்பது வயது பெண்மணி ஒருவர் தன்னந்தனியாக வெளி நாட்டிற்குச் செல்வது என்பது யாராலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு நிகழ்வு. இதற்கு முழுக்காரணம் காமா அம்மையாரின் தந்தை சேராப்ஜி பட்டேல் எடுத்த முடிவே ஆகும். இதற்கு அவரது தாயாரும், சகோதரர் ஆர்தீஷர் படேலும் ( Ardesher Patel) எல்லா ஆதரவையும் நல்கினார்கள்.*

*பிளேக் நோய்த் தாக்கம் மட்டுமல்லாமல் வெளி நாட்டுப் பயணம் மேற்கொள்வதற்கு ஒரு மாதத்திற்கு முன் ஒரு நாள் டாக்ஸியில் இருந்து இறங்கும் போது டாக்ஸி ஓட்டுனர் அவர் இறங்குவதற்குள் காரை எடுத்ததால் தரையில் குப்புற விழுந்து முகத்தில் பலமாக அடிபட்டு வாய் ஒருபக்கம் சிறிது கோணலானது. பம்பாயில் சிகிற்சை செய்த டாக்டர் ஒரு சிறு அறுவை சிகிற்சையில் சரி செய்து விடலாம் என்று அறிவுரை கூறியும் காமா அம்மையார் குடும்பத்தினர் அவர் வெளிநாட்டுப் பயணத்தைத் தள்ளி வைக்காமல், அவருக்கு பிளேக் நோய்க்கான சிகிற்சை மட்டுமல்லாமல் முக அறுவை சிகிற்சைக்கும் சேர்த்து இத்தாலி நாட்டில் ஒரு பெரிய மருத்துவ மனையில் ஏற்பாடு செய்தார்கள். இதற்கான மருத்துவச் செலவு மேலும் ஐரோப்பிய நாடுகளில் பல மாதங்கள் வசதியாகத் தங்குவதற்கும் ஏராளமான பணம் 'பவுண்டாக' மாற்றப்பட்டு காமா அம்மையாரின் பெயரில் லண்டன் வங்கி ஒன்றில் செலுத்தப் பட்டது.*

*லண்டனில் தாதாபாய் நௌரோஜி அலுவலகத்தில் இருந்து ஒருவர் துறைமுகத்திற்கு வந்து காமா அம்மையாரை வரவேற்று ஓட்டல் ஒன்றில் தங்க வைத்து மறுநாள் ரோம் நகருக்கு ரயிலில் அனுப்பி வைத்தார். அங்கு காமா அம்மையாரின் மாமனாரான குர்ஷெட்ஜி காமா **(Kurshedji Cama)** அவர்களின் பார்ஸி நண்பர் ஒருவர் அவரை அன்புடன் அழைத்து அவர் வீட்டில் தங்க வைத்து மறுநாள் ரோம் நகரில் பிரசித்தி பெற்ற ஸாண்டா மரியா நோவா மருத்துவ மனையில் (SANTA MARIA NOVA HOSPITAL) சேர்த்து, அவரும் அவரது குடும்பத்தாரும் தினமும் மருத்துவ மனைக்கு வந்து அவருக்குத் தேவையான வசதிகள் அனைத்தும் செய்து கொடுத்தார்கள்.*

*இந்த சந்தர்ப்பத்தில் காமா அம்மையாரின் மாமனாரைப் பற்றிய விபரங்கள் கூறியே ஆகவேண்டும். குர்ஷெட்ஜி காமா அவர்கள் அந்நாளில் பெரும் அளவில் ஏற்றுமதி வர்த்தகம் செய்து வந்தார். வர்த்தகம் தொடர்பாக அவர் அடிக்கடி சீனா மற்றும் எல்லா ஐரோப்பிய நாடுகளுக்கும் பயணம் செய்து வந்தார். எனவே அவருக்கு அந்நாடுகளில் எல்லாம் நல்ல தொடர்பு இருந்து வந்தது. மேலும் அந்நாடுகளில் தங்கித் தொழில் புரிபவர்கள் பெரும் பாலோர் பார்ஸி இனத்தவர்கள். குர்ஷெட்ஜி காமா அவர்கள், தான் கடைப்பிடித்து வந்த ஜொராஸ்டிரியன் **(Zorastrian)** மதக்கோட்பாடுகளை **(Avesta Scriptures of Zorastrian)** தன்னால் இயன்றவரை மற்ற நண்பர்களுக்கும் தூரத்து உறவினர்களுக்கும் பரப்பி வந்தார். எனவே அவர்கள் எல்லோரும் இவரைத் தங்கள் மத போதகராகவே ஏற்றுக்கொண்டு அவரது சொல்லுக்கு பெரும் மதிப்பளித்து வந்தார்கள்.*

*காமா அம்மையாருக்கும் அவர் கணவருக்கும் கருத்து வேறுபாடுகள் பல இருந்து பிரிந்து வாழ்ந்தாலும் அவர்களிடையே விவாகரத்து எதுவும் நடைபெறவில்லை. அதற்கு மூல காரணம் காமாவின் மாமனார் இவர் மீது வைத்திருந்த அளவு கடந்த பாசமும் மதிப்புமே ஆகும். எனவேதான் காமா அம்மையார் வெளிநாடு பயணம் துவங்குவதற்கு முன் தன் மாமனாரைச் சந்தித்து ஆசி பெற்றபோது , அவர் இத்தாலி, ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் ஸ்காட்லாண்ட் போன்ற நாடுகளில் உள்ள தன் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் விலாசத்தை அளித்து , தன் அன்பு மருமகளின் பயணம் பற்றி முன்கூட்டியே செய்தி அனுப்பி விட்டார். எனவே மேலே குறிப் பிட்டுள்ள நாடுகளில் உள்ள உறவினர்களாலும் நண்பர்களாலும் காமா அம்மையாருக்குச் சிவப்புக் கம்பள வரவேற்பு கிடைத்தது.*

*இவ்வாறாக காமா அம்மையாருக்கு மருத்துவ மனையில் கொடிய பிளேக் நோயின் பாதிப்புகளை அடியோடு அகற்றும் சிகிற்சைகள் சிறப்பான முறை யில் அளிக்கப் பட்டது. ஆனால் அவர் முகத்தில் இருந்த கோணலை அகற்ற **(Facial Paralysis)** அறுவை சிகிச்சை செய்ய அந்த மருத்துவ மனையில் உள்ள அறுவை சிகிற்சை நிபுணர்கள் தயங்கினர்.. அதற்கு அவர்கள் கூறிய*

காரணம் மண்டை (Skull) ஓட்டில் செய்யப்படும் அறுவை சிகிற்சை மிகவும் ஆபத்தானது. அவர்கள் கணக்கின் படி பத்து பேர்களில் ஒருவர் தான் குணமடைந்திருக்கிறார். மேலும் காமா அம்மையாரின் பாதிப்பு அவ்வளவு அதிகமாக இல்லை; எனவே அந்த மருத்துவர்கள் பரிந்துரைக்கும் மருந்து மாத்திரைகளை உட்கொண்டு வருவதோடு அவர்கள் சொல்லிக் கொடுக்கும் முகத்திற்கான பயிற்சிகளை மேற்கொண்டால் நாளடைவில் அந்தக் குறை சரியாகிவிடும் என்று அறிவுரை வழங்கி, மருத்துவ மனையில் இருந்து நல்லபடியாக அனுப்பி வைத்தார்கள்.

எனவே நமது காமா அம்மையார் இந்த முகத்தில் உள்ள குறையுடன் தான், தன் வாழ்நாள் முழுவதும் கழித்திருக்கிறார்கள் என்ற உண்மை நமக்குப் புலப்படுகிறது. ஆனால் இந்தத் தகவல் எங்கும் பதிவு செய்யப்பட வில்லை. அவருடன் பழகிய தலைவர்கள் எவரும் தங்கள் வரலாற்றுக் குறிப் பில் இது பற்றி எங்கும் குறிப்பிடவில்லை. ஆனால் இதற்கு விதி விலக்காக விளங்கியவர் M.P.T .ஆச்சார்யா என்ற ஒரு தமிழ் சுதந்திரப் போராட்ட வீரர். அவர் வாழ்க்கைக் குறிப்பில் குறிப்பிட்டுள்ள செய்தியைப் பார்க்கும் முன் ஆச்சார்யா அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

